# பாதுகாவலன்
PATHUKAVALAN


University of Jaffna Sri Lanka — Periodicals — Library

### பொருட்காட்சி

பிரபல ஓவியர் டக்ளஸ் பெரேராவால் தீட்டப்பட்ட 55 பட்டிக் ஓவியங்களில் ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் முனிவரின் பணிகள், வேறு புத்தகங்கள், படங்கள் அடங்கிய கண்காட்சியை கண்டி ஆயர் கண்டியிலுள்ள சுற்றம்பை, புனித மரியாள் ஆலய சுற்றூடலில் திறந்து வைத்துள்ளார்.

மலர்: 116 இதழ்: 2 19-1-1990 (ஜனவரி 19 — ஜனவரி 26) இலங்கையின் ஒரே தமிழ் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=

## ★ 300 ஆண்டுகளுக்கு முன் முனிவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

## ★ இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை நிர்மூலமாகும் முயற்சி தோல்வி

# 1689 இல் வடக்கில் முனிவர் சிறைப்பட்டிருப்பின்


# கத்.திருச்சபை அன்று நிர்மூலமாக்கப்பட்டிருக்கும்

**இலங்கையின் பிரபல வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான அருள்திரு. குவின்ரஸ் ஜீ. பெரேரா ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் முனிவரின் காலத்து வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டு 1689 கிறிஸ்மஸ் தினத்தன்று யோசவ் வாஸ் முனிவர் யாழ்ப்பாணத்தில் சிறைப்பட்டிருப்பின் இலங்கையில் கத். திருச்சபை நிர்மூலமாக்கப்பட்டிருக்கும் என கூறுகின்றார்.**

1711-ம் ஆண்டு ஜனவரி 16-ம் நாள் இறைபதம் எய்திய ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் முனிவர் தேசியதினம் இவ்வாண்டு ஜனவரி 16-ம் நாள் முழு இலங்கையிலும் கொண்டாடப்படும் இவ்வேளையில் அவரைப்பற்றிய பல தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

சென்ற ஆண்டு மே மாதம் 15-ம் திகதி முனிவரை ஆசாரத்துக்குரியவர் என திருச்சபை பிரகடனம்செய்து வெளியிட்ட அறிக்கையும் வாசகர்கள் நன்மை கருதி 3-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்படுகின்றது.

வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ளும் அருள்திரு. குவின்ரஸ் பெரேரா, யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் டச்சுக்காரரின் பொதுஆணையாளராகப் பணிபுரிந்த அதிரியான் வான் றீட் சரியாக முன்னூறு ஆண்டுகளுக்கு முன் 1689 கிறிஸ்மஸ் தினத்தன்று இலங்கையிலிருந்து கத்தோலிக்கரை முற்றாக அழித்துவிடும் நோக்குடன் கொடூரமான வேதகலாபனையைத் தூண்டிவிட்டார் என்றும், பலர்சிறைப் படுத்தப்பட்டனர் என்றும், யோசவ்வாஸ் முனிவர் தெய்வாதீனமாக தப்பிக்கொண்டதாகவும் முனிவர் தமது சொந்தக் கைபட எழுதியவற்றை ஆதாரங்களாக பிரசுரித்து வெளியிட்டுள்ளார். வரலாற்று ஆர்வலர்கள் இவ்வார ஆங்கில கத்தோலிக்க பத்திரிகையில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.



பொதுநிலையினர் ஆணைக்குழு நடாத்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்றமைக்கான பரிசில்களை யாழ் ஜெயம் (விக்ரர் மாஸ்ரர்) அவர்கள் வழங்குவதையும் முதல், இரண்டு, மூன்றுவதற்கான பரிசில்களை, முறையே மிருசுவில், மயிலிட்டி, மானிப்பாய் பங்கு பொது நிலையினர் சார்பில் பெற்றுக் கொள்வதையும் இப்படத்தில் காண்கிறீர்கள். பரிசு விபரம் பக்கம் 7இல்.



**ஆசாரத்திற்கு உரிய யோசப் வாஸ் முனிவர் புனித நிலை அடைய உதவ வேண்டும்**

### மறைக்கல்வி நிலையம்

கடந்த மார்கழி 2-ம் திகதி பண்டாரவளையில் புதிய மறைக்கல்வி நிலையம் ஒன்றை பதுளை மறைவட்ட ஆயர் திறந்துவைத்துள்ளார். அன்று எல்லா பங்குகளிலிருந்தும் பங்குதந்தையர்களும், அருட்சகோதரிகளும், மறையாசிரியர், மறையாசிரியைகளும் கலந்து கொண்டனர். அன்றையதினம் எல்லாபங்குகளிலும் போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இப்போட்டி நிகழ்ச்சிகளில் பசறைபங்கிலிருந்து நடாத்தப்பட்ட வில்லுப்பாட்டு முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது.

தகவல்: T. R. செல்வி

### கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

(தை 18—25)

தை 18 - அவர்கள் உம்மை அறிய (அரு.17:3)
தை 19 - அவர்களைக் காத்தருளும் (அரு 17:11)
தை 20 - அவர்களை அர்ச்சித்தருளும் (அரு.17:17)
தை 21 - உலகிற்கு அனுப்பினீர் (அரு.17:18)
தை 22 - வார்த்தையினால் என்னில் விசுவாசம் கொண்டவர்கள் (அரு 17:20
தை 23 - ஒன்றாயிருப்பார்களாக (அரு.17:21)
தை 24 - நீர் எனக்கு அளித்த மகிமையை அவர்களுக்கு அளித்துள்ளேன் (அரு.17:22)
தை 25 - நீர் என்னை அன்பு செய்த உமது அன்பு அவர்களில் இருப்பதாக (அரு.17:26)

### பேராலயத்தில் நினைவுப்பலி

மறைந்த அருட்தந்தை மேரிபஸ்ரியன் அடிகளாரின் 4-வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி தைமாதம் 8-ந் திகதி (திங்கட்கிழமை) காலை 8-30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நினைவுப்பலி நடைபெற்றது. இத்திட்டத்தின் தலைவரான வண பிதா. P M இம்மானுவேல் அடிகளினால இரங்கற்பலி நிறைவேற்றப்பட்டது. தலைவர் தமது ஆரம்ப உரையில் "பஸ்ரியன் அடிகளாரின் சேவையினையும், அவரது சேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ள கல்வித்திட்டத்தின் நோக்கங்களையும் தெளிவுபடுத்தினார். திருப்பலி முடிவில் இணைச்செயலாளரினால் நன்றியுரை வழங்கப்பட்டது.

நகரப்பாடசாலைகளிலிருந்து வருகைதந்த மாணவ-மாணவியர் நினைவுப்பலியில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ கட்டுரை - கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் அவர்களது தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இணைச்செயலர்.
(BEAS)

### திருத்தந்தையின் பயணங்கள்

1990-ம் ஆண்டு மே மாதம் 6-ந் திகதி — 13-ம் திகதி வரை 2-வது முறையாகத் திருத்தந்தை மெச்சிக்கோவிற்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். மேலும் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹங்கேரி நாட்டிற்குத் திருத்தந்தை தேசப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார் என வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### ஐக்கியம்

இம்மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகின்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 25ஆம் திகதி சவுல், பவுலாக மனம் மாறிய விழாவன்று முடிவடைகின்றது.

1908 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக செபிக்கும் முயற்சி 1966 இல் இருந்து ஜனவரி 18 — 25 க்கு உட்பட்ட நாட்களில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

நாம் ஒன்றிப்புக்காகச் செபிக்க வேண்டும். ஏனெனில் செபிக்கும் பொழுதுதான் நம்மைக் கடவுள் முன் வெளிப்படையாக்குகிறோம், சுய விருப்புக்களை விலக்க முயலுகின்றோம், எமது பாதுகாப்புக்காக நாம் பற்றிப்பிடிக்கும் பொருட்களை கைவிட முன் வருகிறோம், நாமும் பிற கிறிஸ்தவர்களுடன் இணைந்து இதற்காகச் செபிக்கும் பொழுது "அவர்கள் ஒன்றாக இருக்கவேண்டுமென்று" யேசு செபித்த செபம் புதிய வடிவம் பெறுகின்றது.

இவ்வாண்டு கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்துக்கென தரப்பட்டுள்ள கருப்பொருள் "கிறிஸ்துவின் செபத்தில் ஐக்கியமாக இருத்தல்" இது சென்ற ஆண்டுக்கால கருப்பொருளுடன் நெருங்கிய தொடர்புடையது. இவ்வாண்டு அருளப்பர் நற்செய்தியில் 17 ஆம் அதிகாரத்திலுள்ள யேசு பிதாவிடம் வேண்டிய செபம் தரப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களிடையே ஐக்கியம் ஏற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் தன்மையைக் கொண்டுள்ள இவ்வாசகம் கடந்த காலங்களில் ஒருபோதும் இதற்கென தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் பன்றாடும் ஒற்றுமைக்கும், ஐக்கியத்துக்கும் காரணமாக இருக்கின்ற கிறிஸ்து, கடவுளுடன் கொண்டுள்ள உறவையே இவ்வாசகம் உணர்த்துகின்றது.

அருளப்பர் தாம் வாழ்ந்த காலத்தில் திருச்சபை எதிர்கொண்ட சூழ்நிலைகளை மையமாகக் கொண்டே தனது நற்செய்தியை எழுதினார். வேதகலாபனைகளால் கிறிஸ்தவர்களுக்கு வெளியார் கொடுத்த துன்புறுத்தல்களையும், பிரிவினைக்குழுக்களில் இருந்து கொண்டு தாமே நற்செய்திக்கு உண்மை விளக்கம் கொடுக்கவல்லவர்கள் என வாதிட்டு வந்த மக்களின் சூழ்நிலைகளையும் மனத்தில் கொண்டே உண்மையான கிறிஸ்தவ ஒற்றுமை எத்தகையது எனக் காட்டியுள்ளார்.

இச் செபமானது பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகிறமை திருச்சபையில் அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. "ஒற்றுமைக்கான செபம்" என்றும் "பரிசுத்தமாக்குதலுக்கான செபம்" என்றும், "தலைமைக் குருவின் செபம்" என்றும், "புனிதப்படுத்தும் செபம்" என்றும் "கெத்சமெனி செபம்" என்றும் அழைக்கப்படுகின்றது

இத்துணை செல்வம்மிக்க, பரந்த கருப்பொருளிலிருந்து இரண்டு முக்கிய எண்ணங்கள் பிறக்கின்றன. ஒன்று, கிறிஸ்துவுக்கு தனது வாழ்வில் செபம் அவசியமாக இருந்தது போல கிறிஸ்தவர்களாகிய எமக்கும் கிறிஸ்தவ வாழ்வுக்கு செபம் அவசியம் என்பது. இரண்டாவது 17 ஆம் அதிகாரத்திலுள்ள கிறிஸ்துவின் செபத்தை நாம் எமது செபமாக மாற்றவேண்டும். கிறிஸ்துவின் ஆவி எம்முள் நுழைந்து இச் செபத்தை செபிக்க அனுமதிக்க வேண்டும்.

எட்டு நாட்களுக்கும் பதினேழாம் அதிகாரத்திலுள்ள 3, 11 17, 18, 20, 21, 22, 26 வசனங்களிலிருந்துஎட்டு தலைப்புக்கள் தெரிந்து தரப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான வழிபாடுகள் பல்வேறு மட்டங்களிலும கூட்டாக நடத்தப்பட வேண்டும் என திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. ஒவ்வொரு மறைவட்டத்திலும் இதற்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டு இம்முயற்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. அவர்களோடு தொடர்பு கொண்டு ஆர்வத்துடன் இதற்காக உழைக்க வேண்டியது எங்கள் கடமை.

## தேனருவி

### ஆண்டின் 3ஆம் ஞாயிறு (21-01-90)

### குருட்டு சமூகம்

கண் கெட்டுவிட்டால் சூரியன் தோன்றினாலென்ன மறைந்தாலென்ன — அவன் காண்பது முழுவதும் இருளின் காட்சியே. அவனுக்கு இருள்தான் உண்மை. "இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது" என்ற இசையாஸ் இறைவாக்கும், அது நிறைவேறிற்று என்றுகூறும் புனித மத்தேயுவின் நற்செய்தியும் மக்கள் பலருக்கு இருளின் எதிரொலியாகவே இருந்தன. காரணம் அவர்கள் கண்களை இறுக மூடிக் கொண்டு இருந்தனர்.

உலகில் நிறைந்திருந்த இருளை அகற்ற ஒளியை உண்டாக்கினார் இறைவன். பாவத்தின் விளைவுகள், அரசியல் அடிமைத்தனங்கள், இயற்கையின் அழிவுகள், உடைந்த உறவுகள் அனைத்தும் மனித வாழ்விற்குள் புகையாக ஊடுருவின. அவை உள்ளும், புறமும் காரிருள் மேகம்போல துன்பத்தின் இருளையே பரப்பிக்கொண்டிருந்தன. இருளின் பிடியில் இருந்து மனிதனை விடுவிப்பதே இறைவனின் திட்டம். மக்கள் அனுபவிக்கும் இருள் வாழ்விற்கு மக்கள் மாக்களாய் வாழ்வதே காரணம். அவர்கள் நம்பிக்கை இழந்து, பிரிவினையை வளர்த்து, அநீதியை நாடி கறைபடிந்தவாழ்வால் இருளுக்கு இரைபோட்டுக் கொண்டனர். இறைவாக்கினர் சொல்லைத் தட்டிக் கழித்ததுமல்லாமல், அவர்களைப் புதைக்கவும் தவறவில்லை. இறுதி இறைவாக்கினர் திருமுழுக்கு அருளப்பர் ஒளிபிறக்க வேண்டுமென்று தவம் இருந்தார். உதிக்கவிருந்த ஆதவனின் வருகைக்குத் தடையாய் இருந்த இருண்ட மேகங்களைத் தம் சொற்களால் சாடினார். அநீதியைச் சுட்டிக்காட்டினார். போலிகள், பொய்மைகள், அதர்மங்கள் என்பனவற்றைத் தகர்த்தார். வேரோடு களையத் துடித்தார். அதனால் சிறையிடப்பட்டு, சிரச்சேதமும் செய்யப்பட்டார்.

மரணத்தின் நிழலில் வாடி, அனுதினமும் உடலாலும், உள்ளத்தாலும் மடிந்துகொண்டிருக்கும் எமது இன்றைய சமூகத்தில் இயேசு உதயமாகிவிட்டாரா? அல்லது அக்கதிரவனைக் காணமறுத்து எம் கண்களைக் குருடாக்கிக் கொண்டோமா?

நற்செய்தியில் இயேசுவின் எதிர்பார்ப்பு எம் அகக்கண்களைத் திறக்கும் மனமாற்றமே. இருள்தான் இறுதியெனக்கருதி பிடிவாதம் பிடித்து இருளின் ஆட்சியை இன்னம் பலப்படுத்தக் கூடாது. சுயநலம், காமம், குடிவெறி, பழி, கயமை போன்ற தீவினைகளால் இருளை நீடிக்காது, கிறிஸ்துவின் ஒளியின் ஆட்சிக்கு வாக்களிப்போம். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுடர்ஒளி பரப்ப முன்வந்தது போல நாமும் ஒளியின் மக்களாக வாழ முன்வருவோம். இல்லையேல் நாமும் குருட்டுச் சமூகத்துடன் எண்ணப்பட்டு, காண்பதெல்லாம் இருளின் காட்சியாகவே இருக்கும்.

சுவாமி ஜீவாபோல், அ.ம.தி.

---

இசை. 9 : 1—4 மக்கள் பேரொளியைக் கண்டனர்.
கொரி. 1: 10—13, 17 அனைவரும் ஒன்றுபட்டு வாழுங்கள்.
மத். 4 : 12—23 மனம் திரும்புங்கள், என்பின்னே வாருங்கள்.

---

## வாசகர் கருத்து

பாதுகாவலனே! நீ உண்மையில் எமக்கு பாதுகாவலனே!!

ஏனென்றால் காவலனில் வெளியாகும் ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொருவனையும் மனச்சாட்சியைத் தட்டி இனியாகிலும் திருந்திநட என்று புத்திமதி கூறுவதுபோல் இருக்கிறது. பாதுகாவலனில் வெளிவரும் 'மறையுடன் பிறந்த கதை' உயர்தர மாணவர்களுக்குரிய பகுதியை நான் விரும்பிப்படிக்கிறேன்.

குறிப்பாக சிறுகதைகள் சமூகத்தின் ஒழுக்கசீர்கேடுகளைச் சாதிவேறுபாடுகளை களைந்தெறியக் கூடியனவாக உள்ளன. வளர்க! எதிர்கால எழுத்தாளர்கள். தொடரட்டும் அவர்கள்பணி. மேலும் எழுதிச் செபியுங்கள் போட்டி மூலம் எம்மைத் தனியாகச் செபிக்கும் வாய்ப்பைப் பழக்கப்படுத்தி இறைவனோடு உறவாடக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த பாதுகாவலனுக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

வளர்க உன்பணி!
இரங்க வாசகர்!
ரூ. யூஜின் பற்றிமா றஜனி
நாவாந்துறை

## கலைநிலா

கலைமுகம்

கலையின் பல்வேறு முகங்களைப்பற்றியும், தமிழ்க் கலாச்சாரத்தின் ஒரு சில அடிப்படைகளைப் பற்றியும் ஆய்ந்து அறியத்தரும் காலாண்டுச் சஞ்சிகை கலைமுகம், (தைப்பொங்கல்) சிறப்பிதழாக (இம்மாதம்) வெளிவரும். அதைத் தமிழ்க் கலைகலாச்சாரத்தில் ஈடுபட்டுள்ளோர் கண்டிப்பாகப் படிக்க வேண்டும், அது வளர இயன்ற உதவி புரியவேண்டும். இயலுமானால் தங்கள் ஆக்கங்களையும் அளிக்க வேண்டும்.

கலைகள் பயிலகம்

அடுத்த மாதம் கவின்கலைகள் பயிலகம் ஒன்று முறைமை ஏற்புடையதாகத் திறக்கப்படும். நாடகம், நடனம், இசை, ஓவியம, சிற்பம் முதலிய பிரிவுகளை அது அடக்கி இருக்கும். வீணை, வயலின, மிருதங்கம், ஓர்கன், கிட்டார் புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகள் பயின்று கொடுக்கப்படும். கலைத்துறையில் ஆர்வமுள்ள பலர் இப் பயிலகத்தில் சேர்ந்து படிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர், நீங்கள் இச்சந்தர்ப்பத்தை இழப்பீர்களா?

உயிர்ப்பு விழா

இயேசுக்கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு விழாவை ஒட்டி நமது மன்றத்தல் பல நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்நிகழ்ச்சிகளில் நீங்களும் கலந்து கொள்ள விரும்புகிறீர்களா? அவைகளை வழங்க விரும்புகிறீர்களா? நம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நாடகப் போட்டி

நாடகப் போட்டி ஒன்றை நமது மன்றம் நடத்தும். போட்டிநாடகம தேம்பாவணியில் கூறப்படும்கிளைக்கதைகளைபற்றியதாக இருக்க வேண்டும் முதலாவது பரிசாக 3000/- ரூபாய் வழங்கப்படும். விபரங்களுக்கு நமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

உங்கள் பங்கில்

உங்கள் பங்கில் அல்லது பாடசாலைகளில் நடக்கும் கலைநிகழ்ச்சிகளைப்பற்றி நமக்கு அறியத்தாருங்கள். உங்கள் ஆக்கம், செய்தியாகவோ அல்லது மதிப்பீடாகவோ இருக்கலாம். கலைநிகழ்ச்சிகளுக்கு விளம்பரம் கொடுத்து, பலருக்கும் பயனுள்ளதாகச் செய்வோம். நீங்கள் நம்முடன் தொடர்பு கொள்ளின் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:

செயலர்,
திருமறைக்கலாமன்றம்
223, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

நீ. மரியசேவியர் அடிகள்
யாழ் மறைமாவட்டக்
கலை கலாச்சார இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 14. அதிரியான், அந்தோனின்

திராஜனின் பின்
கி. பி 117இல்
அதிரியான் அரசகட்டிலேறினான்.
சாம்ராஜ்ய நலம்தான்
சகலமும் அவனுக்கு.
சட்டமும், ஒழுங்கும்
அவன் சதா விடும் மூச்சு.
நெல்லுக்கு இறைத்த நீர்
புல்லுக்கும் கசிவது போல
அவனது இந்தப் போக்கு
கிறிஸ்தவருக்கும் சிறிது சாதகமாயிற்று.
கிறிஸ்தவருக்கெதிரான சட்டங்களை அவன் தளர்த்தவில்லை.
ஆனால்,
அவர்களுக்கெதிராய் மக்கள் கிளர்வதை வெறுத்தான்.
எக்காரணத்துக்கும்
சட்டமும், ஒழுங்கும் குலைவதை
சகிக்க அவன் விரும்பவில்லை.
விளைவு
கிறிஸ்தவரின் குற்றங்கள் தொடர்பாக
தெளிவான விசாரணை வேண்டுமென்றான்.
மக்களின் இச்சைக்கும், விருப்புக்கும்
இடங்கொடுக்க வேண்டாமென்றான்.
இருப்பினும்
அவனது ஆட்சியில்
இரத்தம் சிந்திய சாட்சிகளின் எண்ணிக்கை குறைவில்லை.
அவனது ஆட்சியில்
அரசுக்கெதிராக
யூதர்கள் நடாத்திய ஒரு இரத்தப்புரட்சியும்
கிறிஸ்தவர் தலைகளிலேயே
விளைவைக் காட்டியது.
இவனது ஆட்சி
138இல் முடிந்துபோக
பதவிக்கு வந்தவன்தான் அந்தோனின்
ஆட்சியில்
அவன் தன் முன்னோடியையே பின்பற்றினான்.
மக்கள் கிளர்ச்சிகளையும்
இரத்தச் சொரிவுகளையும் அவன் விரும்பவில்லை.
அதனால்,
சட்ட நடைமுறைகளை
அதிரியானிலும் விட அதிகமாக்கினான்.
ஆனாலும் அத்துமீறல்கள் இருக்கவே செய்தன.
புனித பொலிகாப்பின் மரணம்
இத்தகைய மக்கள் கிளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.
புனித பொலிகாப்
இவர் புனித அருளப்பரின் சீடர்
சிமெர்னா நகரின் ஆயர்.
ஏறத்தாழ தொண்ணூறு வயதடைந்த முதியவர்
கி. பி 155இல் இவர் கைது செய்யப்பட்டார்.
விசாரணைக்கு
கழுதையில் அமர்த்தப்பட்டு
விளையாட்டுத்திடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.
விசாரணை ஆரம்பமானது
"அவவிசுவாசிகளுக்கு அழிவு''
எனச் சபதமிடக் கேட்கப்பட்டார்.
(உரோமையர் கிறிஸ்தவரை அவவிசுவாசிகள் என்றே கருதினர்)
புனித பொலிகாப்போவெனில்
மிகுந்த துணிவுடனும்,
நிறைந்த மகிழ்வுடனும்
கூட்டத்தின் பக்கம் இருகையையும் நீட்டி
"அவவிசுவாசிகளுக்கு அழிவு'' என முழக்கமிட்டார்.
பின்பு ஆளுநன்
இயேசுவைத் தூஷிக்கக் கட்டளையிட்டான்.
புனிதரோ,
"எண்பத்து ஆறு ஆண்டுகள்
இயேசுவுக்குப் பணிபுரிந்தேன்.
அவர் எனக்கு
எந்தத் தீமையுமே செய்யவில்லை.
நான் ஏன் என் மீட்பரும் அரசருமாம் —
அவரைத் தூஷிக்க வேண்டும்?'' என்றார்.
கோபங்கொண்ட அவன்
சிங்கங்களையும், தீயையும் காட்டி விரட்டினான்.
புனிதரோ
பணிவாக, ஆனால் துணிவாக
"நான் ஒரு கிறிஸ்தவன்'' என அறிக்கையிட்டார்.
ஆளுநன் கட்டளையிட்டதும்
கூட்டம் பெருந் தீ மூட்டியது.
ஆரவாரத்துடன் அவரைத் தீயுள் எறிந்தது.
ஆனால் தீ அவரைத் தீண்டவில்லை.
பின்பு வாளால் தாக்கி அவரைக் கொன்று போட்டனர்.
இவ்வாறு அவன் ஆட்சி
கி. பி. 161இல் முடிவுற்றது.

— சந்திரன்

## இறையடியார் பிதா ஜோசவ் வாஸ் அவர்களின் வீரத்துவமான புண்ணியங்கள் பற்றி புனிதர் ஆய்வுப் பேரவை வெளியிட்ட அறிக்கை



1989 ஏப்ரல் 4-ம் திகதி கருதினால்மார். ஆயர்களின் பேராயம், உரைஞரான கருதினால் சைமன் லூர்துசாமி மூலமாக இறையடியாரான ஜோசவ் வாஸ் முனிவர் இறைவனைச் சார்ந்த புண்ணியங்களையும், அடிப்படையான நான்கு நல்லியல்புகளையும், இவைசார்ந்த ஏனைய புண்ணியங்களையும் வீரத்துவமான அளவில் அனுசரித்து வந்தார் என்பதை அறிக்கையிட்டது.

ஜோசவ்வாஸ் முனிவரின் புனிதத்துவம் பற்றிய ஓர் அறிக்கையை திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பரிடம் மேலாளரான கருதினால் சமர்ப்பித்தார். புனிதர் ஆய்வுப் பேரவையின் வாக்குறுதிகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட திருத்தந்தை இவ்விறையடியாரின் வீரத்துவமான புண்ணியங்கள் பற்றிய அறிக்கை சிறப்பாக வெளியிடப்பட வேண்டுமெனக் கட்டளை இட்டுள்ளார்.

இது செய்தபின். இன்று அழைக்கப்பட்டிருந்த கருதினால்மார், மேலாளர், விசாரணையின் உரைஞர், கீழ் கையொப்பம் இட்டிருக்கும் பேரவையின் செயலாளர் பிரசன்னமாய் இருக்கவேண்டிய ஏனையோர் அனைவர் முன்னிலையிலும் திருத்தந்தை கூறியதாவது :

"இறையடியாரான ஜோசவ் வாஸ் முனிவர்பற்றிய ஆய்வில் இறைவனையும், அயலாரையும் பொறுத்தமட்டில் இறை சார்ந்த புண்ணியங்களாகிய விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பனவும், அடிப்படையான நான்கு நல்லியல்புகளான விவேகம், நீதி, திடம், நேர்மை என்பனவும், இவை தொடர்பான ஏனைய புண்ணியங்களும் வீரத்துவமான அளவிலும், குறிக்கப்பட்ட விதத்திலும் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது,

புனிதர் ஆய்வுப் பேரவையின் இந்த அறிக்கை பிரகடனம் செய்யப்பட்டு அதன் நடபடிகளுள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது திருத்தந்தையின் விருப்பம்.

1989 மே 13இல் உரோமாபுரியில் அளிக்கப்பட்டது.

கருதினால்
அஞ்சலஸ் பெலிஸி

## இணைவோம்

காலத்தின் கோலத்தினால்
கவலைகள் வளர்ந்து விட்ட எம்மில்
ஒளியொன்று தோன்றும்
விடிவொன்று வரும்
எனும் ஏக்கத்தோடு
தொடரும் வாழ்க்கையை — மிளிரும்
மலர் நாளோடு கழித்து வருகிறோம்.
தொடரும் அழிவுகளை
விரைவில் நீக்கிட — புவியில்
வாழும் மனிதரை புறம்பாக்காமல் — எம்மில்
ஊன்றியுள்ள :
சாதி, இன, பேத வேறுபாடுகளை
ஆளுக்கொரு வேலியாக்கிக் கொள்ளாமல்
அனைவரையும் புரிந்து கொண்டு — எம்
அயலவர் உணர்வு உணர்ந்து — நாம்
அன்பு எனும்
சங்கிலியில் இணைவோம்.

வெ. யூஜின்
வாகரை

## புங்குடுதீவுப் பங்கில் கிறிஸ்மஸ் ஒளிவிழா

புங்குடுதீவு மகாவித்தியாலய கத்தோலிக்க மாணவர் மன்றம், கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை மேற்படி மகாவித்தியாலயத்தில் 'கிறிஸ்மஸ்' ஒளி விழாவை நடாத்தியது.

அன்று காலையில் 8.30மணியளவில் வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் கிறீஸ்து அரசர் ஆலயத்தில், பங்குத் தந்தை இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளாரால் ஒளிவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து 10.00 மணியளவில் மகாவித்தியாலய மண்டபத்தில் கொத்தணி அதிபர் திரு A C. நல்லையா அவர்கள் தலைமையில் ஒளிவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்திரு - இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளார் தமது சிறப்புரையில் :- "கிறீஸ்துவின் பிறப்பு விழாவை முன்னறிவிக்கும் இந்த ஒளிவிழாவை பிறசமய மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் கொண்டாடுவது சாலவும் பொருந்தும்- ஏனென்றால்; கிறீஸ்துவின் பிறப்பு எமக்கு மட்டுமல்ல, இந்த முழு உலகத்துக்கும் ஓர் நற்செய்தியாகும்'' என்று கூறினார்.

வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு E சண்முகம் நிர்வாக அதிகாரி திரு, ரட்ணராஜா, ஆசிரியர்கள் - திரு. திருநந்தகுமார். ஐ. சண்முகநாதன் யோ. பூராசா அதிபர், உட்பட பலர் உரையாற்றினார்கள். தொடர்ந்து; கிறீஸ்துவின் பிறப்பை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட நடனம் - சங்கீதம் - வில்லிசை - நாடகம் - கிறீஸ்மஸ் ஆங்கிலப் பாடல்கள் போன்ற கலை-கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலங்கை வானொலி கத்தோலிக்க சேவை அறிவிப்பாளர் V. அன்ரனிஸ் மரியதாஸ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

இதல் மாணவர்கள்-ஆசிரியர்கள் - பெற்றோர்கள், அருட் செல்விகள் உட்பட அநேகர் கலந்து கொண்டார்கள்.

தகவல் :-
V. A. மரியதாஸ்
(இலங்கை வானொலி இணைப்பாளர்)

## காரைநகரில் திருப்பலியும் கலைவிழாவும்

ஊர்காவற்றுறையில் உள்ள காரைநகரில் மார்கழி மாதம் 7-ம் திகதி பஸ்டிப் போவில் திருப்பலியும், கலைவிழாவும் இடம் பெற்றது. இதில் ஊர்காவற்றுறை பங்கும் மானிப்பாய் பங்கும் கலந்து கொண்டது. ஊர்காவற்றுறை பங்கிலிருந்து அருட் திரு. கிருபானந்தன் அடிகளாரும், மானிப்பாய் பங்கிலிருந்து அருட்திரு. டேவிற் அடிகளாரும் திருப்பலியை நிறைவேற்றினர். கிருபானந்தன் அடிகளார் தமது மறையுரையில் "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார்'' எனும் கருத்தை மையமாக வைத்து உரையாற்றினார். திருப்பலி முடிவடைந்ததும் கலை நிகழ்ச்சிகளை இரு பங்கு மாணவர்களும் நிகழ்த்தினர். இந் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்நின்று உழைத்தவர்கள் டிப்போ ஊழியர்களும், ஊர்காவற்றுறை மானிப்பாய் பங்குத்தந்தை ஆகியோருமே யாவர். இந்துமக்களிடையே இப்படியொரு நிகழ்ச்சி நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

தகவல்:- நிற்று சிவந்தி
கொலினஸ்.
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் சாவதில்லை

உயிலூர் றோகான் ஸ்ரனி அன்ரனி

வானம் முழுவதையும் ஆக்கிரமிப்பு செய்திருந்த நிலவு மெல்ல மெல்ல விடைபெற்றுக் கொண்டிருந்தது ஆதவன் தன் தலையை நீட்டி நான் எனது கடமையை ஆரம்பிக்கலாமா என்று நிலவிடம் அநுமதிபெறுவது போலிருந்தது. ஒரு புதிய விடியலைக்காண வானத்து பறவைகள் இருப்பிடங்களை விட்டு வானவெளியில் சிறகடிக்கத் தொடங்கிய வேளை அது. அமைதியாக ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தான் பாஸ்கர். யன்னலினூடாக பட்டுத் தெறித்த ஒளிச்சிதறல்கள் முகத்தில் பட்டபோது திடீரென விழித்துக்கொண்டான். ஒரு புதிய விடியலை சந்திக்கக் கூடிய மனநிலை அவனுக்கு இருக்கவில்லை. சே! வாழ்க்கையே அலுத்து விட்டது! என்று மனதிற்குள் சலித்துக் கொண்டான் இப்போது வீட்டிலே இருப்பது அவனுக்கு சிறையாகிவிட்டது. எத்தனையோ இளமைக்கால கனவுகளையும், ஏக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும் சுமந்து வாழ்ந்த அவனுக்கு எல்லாமே கானல் நீராகிவிட்டதை நினைத்து மனதிற்குள் விரக்தியாகச் சிரித்தான். 'வீட்டிற்குள் இருக்கவும் முடியவில்லை, வெளியில் சுதந்திரமாக போகவும் முடியவில்லை. வாழ்க்கையை இப்படியான சிறை வாழ்க்கையாக கழிக்கத்தான் ஆண்டவன் எங்களைப்படைத்தானா! கொஞ்சக்காலமாக பாடசாலை நடக்கவுமில்லை, படிக்க முடியவும் இல்லை. நீ வெளியில் எக்காரணத்தைக் கொண்டும் செல்லக்கூடாது' இது அம்மாவின் கண்டிப்பான கட்டளை. ஏனெனில் நான் ஒரு இருபது வயது நிரம்பிய இளைஞன். நான் A.L. படித்துவிட்டு பல்கலைக்கழகம்சென்று நல்ல வேலை பெற்று சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாக வாழவேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். நான் O.L. படித்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். பாடசாலைக்கு போகும் போதும், திரும்பும் போதும் தோள்மேல் கை போட்டுக் கொண்டு நண்பர்களுடன் சைக்கிளில் வரும்போது வீதியில் போகிற பெட்டைகளைப் பார்த்து 'வருது, வருது, விலகு விலகு' என்று பாடி கேலி செய்த நாட்கள் மறக்க முடியாதவை அதை நினைத்த போது சிரிப்புத்தான் வந்தது. ஆனால் இன்று A.L. படிப்பை தொடர முடியாமல் வீட்டுச் சிறைக்குள் வாழும் நிலையை எண்ணி அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியவில்லை. 'அம்மா, நான் என்ன குமர்ப்பிள்ளையா வீட்டமறிச் சுவைக்க' என்று அம்மாவிடம் கேட்டால் முறைச்சுத்தான் பார்ப்பா. "உனக்கென்னடா பாஸ்கர் தெரியும். உன்னை வெளியில விட்டிட்டு நான் வயித்தில நெருப்ப கொட்டிக் கண்டு கிடக்க வேணுமெண்டால் நீ வெளிய போயிற்று வா. இந்தக்காலத்துப் பிள்ளைகளுக்கு எல்லாமே விளையாட்டுத்தான்." என்பா அம்மா. ஞாயிறு கோயிலுக்கு பூசைக்கு போவதென்றாலும் அம்மாதான் சென்றி. இளமை திரும்பி வராத ஒரு பருவம். என்னுடைய மனதிலே அமக்கும் எண்ணற்ற ஆசைகளுக்கும், ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் சமாதிகட்ட வேண்டித்தான் வரும் போலிருக்கின்றது. சுதந்திரப்பறவைகளாக சிறகடித்து பறக்க வேண்டிய வயதில் சிறகொடிந்த நிலையில் சிறைக்குள் வாழும் வாழ்க்கையை நினைத்த போது விரக்தியே வெளிப்பட்டது எப்படியோ என் சிந்தனைகளின்று விடுபட்டு அறைக்கு வெளியே வந்தபோது அப்பா பையுடன் சந்தைக்கு இளம்புவது போலிருந்தது. பாவம் அப்பா! வீட்டிலே ஓய்வாக இளைப்பாற வேண்டிய நேரத்திலே நடந்து ஞாயிறுச் சந்தைக்கு போக கிளம்புகின்றார். முன்பெல்லாம் ஞாயிறுச் சந்தைக்கு நான்தான் போவேன். ஆனால் வீட்டின் சிறைவாசத்தால் அப்பாபோக வேண்டிய நிலை அன்று அப்பாவின் நண்பர் ஒருவர் சொன்ன வார்த்தையை நினைத்தபோது மனதிற்குள் சிரிப்புத்தான் வந்தது. 'இப்ப C 90கள் தான் றோட்டில திரியினம்' என்று தன்னைப் பார்த்து யாரோ கேலி செய்ததாகச் சொன்னார். எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த போது மண்டையே வெடித்து விடும் போலிருந்தது. என்னுடைய எதிர்காலக் கனவுகள் எல்லாம் கலைந்து, கரைந்து காற்றோடு கலந்துவிட்டஉணர்விலே நடைப்பிணமாக வீடே தடுப்பு முகாமாக மாறிவிட்ட ஒரு வாழ்க்கை எனக்குத் தேவையா என்று என்னையே ஒருமுறை கேட்டுக்கொண்டேன்.

ஞாயிறு வந்துவிட்டால் மனதில் ஒரு சிறு சந்தோஷம். பூசைக்கு அம்மாவுடன் போக ஒரு சோட் லீவு போட்ட மாதிரி. அன்றுதான் இந்த வெளியுலகத்தை பூசைக்கு வரும் நண்பர்களை சந்திப்பதற்கு கிடைக்கும் அருமையான சந்தர்ப்பம். அதுவும் பூசை முடிந்தவுடன் அம்மா கோயில் வாசலில் சென்றிக்கு நிற்பா. நான் வழமையாக பூசைக்குச் சென்றால் பிரசங்கமே கேட்பதில்லை. ஏனென்றால் சில நேரங்களில் சுவாமி யாருடைய அறு[illegible] தாங்கவே முடியாது. ஏதோ இதுகாலவரை நான் பார்த்த திரைப்படங்களின் கதாநாயகன் நாயகிகளின் நினைவுகளில் மூழ்கியிருப்பேன் சில நேரங்களில் கர்த்தரைப் பார்த்து' என்னைப்போன்ற இளைஞர்களின் வாழ்க்கை இப்படித்தான் விரக்தியுடன், வேதனையுடன், ஏக்கத்துடன் கழியத்தான் வேண்டுமா' என்று கேட்டதுண்டு. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. கடவுள் மட்டும் இல்லையென்றால் நான் உயிரோடு இருக்கமாட்டேன். என்னைப் பொறுத்த வரைக்கும் இன்று பூசை, வழிபாடுஎல்லாம் வெறும் சடங்குகளாக, வாழ்க்கையை தொடாத அனுட்டானங்களாக மாறிவிட்டன. சிலரைப பொறுத்தமட்டில் வெளிநாட்டுப் பணத்தை விளம்பரப்படுத்தும் அலங்கார நிலையங்களாக ஆலயங்கள் மாக் கொண்டு வருகின்றன. என்னைப்போன்ற இளைஞன் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விற்கும் அர்த்தம் தேடிக் கொண்டிருப்பவன்.

## சிறுகதை

காலைக்கடன்களை முடித்து விட்டு பூசைக்குப்போக அம்மாவுடன் புறப்பட்டபோது அப்பா சந்தையிலிருந்து திரும்பி வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். "சங்கதி ஒன்று தெரியுமே. சந்தைக்கு பக்கத்தில இரண்டு பிரேதங்கள் கிடக்கு. பார்த்தா இரண்டு பொடியன்களட பிரேதம் மாதிரித்தான் தெரியுது. முகமெண்டா சிதறிப் போய்க்கிடக்குது. தம்பியகவனமா கூட்டிற்று போ" என்று அப்பா சாதாரணமாகவே சொன்னார். எனக்கோ இப்படியான சங்கதிகளை கேட்டும் மரணங்களை கண்ணால பார்த்து மனமே மரத்து போய் விட்டது இன்று மானிடங்கள் கல்லறைகளில்தான் துயில் கொள்ளுகின்றன. மனிதநேயம், மனிதாபிமானம், இரக்கம் எல்லாம் சமுதாயச் சந்தையில் இவை விற்பனைக்கல்ல என்ற விளம்பரப்பலகையுடன் தொங்கிக் கொண்டிருக்கும் பொருட்கள். எவ்வளவு உயிர்களைத்தான் பறிகொடுத்து விட்டோம்! மனிதமாண்பு இன்று மிதிபட்டு செத்துக் செத்துக்கொண்டிருக்கின்றது. என்னைப்பொறுத்த மட்டில் எதிர்காலத்தில் அதிக நூதன சாலைகளைத்தான் கட்டவேண்டிவரும். ஏனென்றால் மண்ணில் கிடக்கின்ற மண்டையோடுகளையும், எலும்புக்கூடுகளையும் பாதுகாக்கத்தான். மனிதனுடைய மானிடங்கள் ஏன் மரணித்துக் கொண்டு போகின்றன என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. அன்பு, இரக்கமும், மன்னிப்பும், தர்மமும் மனித உயிரை மதிக்கும் மனநிலையும் எடபோதுதான் இந்த மண்ணில் உயிர்பெறுமோ தெரியவில்லை அன்று பூசைக்கு போனாலும் மனம் எனக்கு குழம்பிப்போயிருந்தது. அன்று தேவ அழைத்தல் தினம். பங்குச்சுவாமி வழமையைவிட காரசாரமாக முழங்கிக் கொண்டிருந்தார் "இந்த மண்ணல் தினம் மரணித்துக் கொண்டிருக்கின்ற மானிட மதிப்பீடுகளான அன்பு, மன்னிப்பு சஞ்சீவனிடத்தில் கருணை போன்றவற்றிற்கு உயிர் கொடுக்க இறைத்தொண்டர்கள் தங்களை இறைவனுக்காக அர்ப்பணிக்க முன்வர வேண்டும். மனிதநேயம், மனிதமாண்பு, மனித உயிரின் பெறுமதி போன்றவற்றிற்கு உயிர்ப்பிச்சை கொடுக்க நீதியின்பால் இரக்கத்தின்பால் தர்மத்தின்பால் பசியுள்ள இளைஞர்கள் இறைபணியாற்றவர வேண்டும்" என்று முழங்கிய வார்த்தைகள் என்நெஞ்சிலே சுருக்கென்று தைத்தது. 'ஆம்! நான் ஏன் இந்த மரணித்து போய்க் கொண்டிருக்கும் மானிடங்களுக்கு உயிர் கொடுக்கக் கூடாது? வாழ்க்கையில் போராட்டங்களையும் அதன் விளைவுகளையும் நுகர்ந்து சலித்துப் போன நான் ஏன் இறைத்தொண்டனாக சமாதியை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் மனித நேயத்தையும், மாண்பையும் தடுத்து நிறுத்தக் கூடாது? பாதர்! என் உயிர் உள்ளவரைக்கும் மானிடங்கள் சாகவிடமாட்டேன். செத்துக் கொண்டிருக்கும் மனித நேயத்திற்கு உயிர்கொடுக்க என்னை இறைத்தொண்டனாக அர்ப்பணிக்கத்தான் போகின்றேன். அதற்காக நான் என் உயிரைக் கூட கொடுக்கத்தயார். ஏன் என்னைப்பொறுத்தவரைக்கும் நானும் ஒரு போராளிதான் ஆம்! மானிடங்களை சாகவிடாமல் காக்கப் புறப்பட்ட போராளி. இறைத்தொண்டர் படையில் நான் சேரத்தான் போகின்றேன்.

(யாவும் கற்பனையல்ல)

# "மயிர் தேடும் மானிடரே"

## பதில் வரைபுக்கு தொடர் பதில்

நண்பர் அல்பேட் பாஸ்கரின் கண்டனக் கடிதம் இதழ் 45இல் படித்தேன். அவரின் "காவலன்" இதழ் வாசிப்பைப் பற்றியும் ஆழ்ந்த சிந்தனை நோக்கையும் கண்டு மகிழ்ச்சியுறுகின்றேன்.

ஆனால் இதழ் 41, 42இல் எழுதிய "மயிர் தேடும் மானிடரே" சிந்தியுங்கள் ஒரு நிமிடம் என்ற தொடரிலே நான் எழுதியதின் உட்பொருள் என்னவென்றால், "வாழ்வு தரும் வார்த்தை நானே" என்று கூறிய இறைவனின் அற்புதமான வார்த்தைகள் அடங்கிய விவிலியத்துள்ளே அருவருக்கத்தக்க பொருளாகிய 'மயிர்" உண்டென்று எவரோ சொன்ன செய்தியைக்கேட்டு "மயிர்" தேடியோரை சாடினேனே தவிர......

நண்பா! மயிர் தேடினேன் விவிலியத்துள் மயிர்' இல்லை என்று நான் எழுதி இருந்தால் உமது கண்டனக் கடிதம் ஓரளவு பொருத்தம்.

நான் மயிர் தேடவும் இல்லை —மயிர் இல்லைஎன உம்மோடு வாதிடவும் இல்லை. உம்மைப் போல் பலவாசக நேயர்களும் மயிர் உண்டு என்றே கூறுகின்றனர். இப்படி மயிர் தேடுவோர் இருக்கும்வரை விவிலியத்துக்குள் "மயிர்" இருக்கும் என்றுதான் சொல்லத் தூண்டுகிறது.

நண்பா! எனது ஆக்கத்திற்கு மட்டுமல்ல, "காவலனில்" வரும் ஆக்கங்களுக்கும் உம்போன்றவர்களின் விமர்சனங்களும் — கண்டனங்களும் நிட்சயம் தேவை.

நன்றியுடன்
எஸ். ஏ. நாதர்

# வாழ்வின் கடிகாரம்

கடிகாரங்களுக்குப் பன்முறை சாவி கொடுக்கிறோம். வாழ்வின் கடிகாரத்திற்கு ஒரே ஒரு முறை பாத்திரம் சாவி கொடுக்கப்படுகிறது. கடிகாரத்தின் கம்பி எங்த எப்போ நின்று விடும் என ஒருவராலும் சொல்ல முடியாது. சீக்கரம் நிற்குமா? பின்னர் நிற்குமா? தெரியாது.

மனித வாழ்க்கை நிலையற்றது. நீர்க்குமிழி போன்றது' வானத்திலே தோன்றி மறையும் மின்னலுக்குச் சமமானது. நமது இளமை, அழகு செல்வம் என்றோ ஒரு நாள் நம்மை விட்டு நீங்கி விடும். நரை, திரை மூப்பு நம்மை ஆட்கொண்டு விடும். வெள்ளத்தால், நெருப்பால், கள்வரால் நமது செல்வங்கள் கவரப்பட்டு வறியவராகி நிற்போம். கட்டிய மனைவி எட்டநின்று விடுவாள். பெற்று வளர்த்த பிள்ளைகள் உதாசீனம் செய்து விடுவார். இவ்வளவும் ஏன்? பெற்று வளர்த்த தாய்கூடப் பிணமென்றால் ஒதுங்கி விடுவாள. நம்மை ஆதரிப்பது ஆறடி மண்தான்,

ஆம் செல்வத்தை இழப்பது விசனத்திற்குரியது. சுகத்தை இழப்பது அதைவிட விசனத்திற்குரியது. ஆனால் ஆன்மாவை இழப்பதோ பரிகரிக்க முடியாத. ஈடு செய்ய முடியாத பேரிழப்பு, வாழ்க்கை விரைவாக கடந்து செல்கிறது, திடமனதுடன் அன்புடன் வாழ்ந்து, உண்மையுடனும், உறுதியுடனும் உழைப்பாயாக. நாளையத் தினத்தை நம்பி இராதே. ஏனெனில் அதற்குள் கடிகாரம் நின்று விடலாம். இன்றே தொடங்கு.

அருட் சகோதரி. மேரி லில்லி
ஓசா (அ. கா.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்பெனும் வானங்கள் உறவெனும் கீதங்கள்

ஸ்வரங்கள் இணையும் போது ஓசைகள் இணைந்து தனித்தன்மையான இனிமை தரும் ராககோலத்தை இசைக்கின்றது. இதேபோல் வாழ்க்கை எனும் பயணத்தில் வழிப்போக்கனாக நல்ல நண்பன் சந்திக்க நேரிடுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் நட்புமலர வாய்ப்புக்கள் கிட்டுகின்றது.

நட்பு இன்றி வாழ்வில் பயணம் செய்வது சர்ச்சைக்குரிய நிகழ்வு.

நண்பர்களின் ஒன்றிப்பில் செயலாற்றி இருவருக்கும் இடையிலான மனவேற்றுமைகள், கருத்துமுரண்பாடுகள் இன்றி 'நான் நீ'' என்ற பேதமில்லாமல் ''நாங்களிருவர்'' என்ற உணர்வில் உருவாகும் நட்பு என்றும் அழியாத காவியம் படைக்கும்.

எனினும் நண்பர்களிடையே தோற்றுவிக்கும் உணர்வுகளில் ஆசைகள், விருப்பங்கள், தேவைகள் முழுமையாகப் பகிரப்படல் வேண்டும். அங்ஙனம் புரிந்து கொண்டு, திறந்த உள்ளத்தோடு நட்புறவுகள் துண்டிக்கப்படாத நிலையில் உண்மையான நட்பின் பாலங்கள் அமைய வாய்ப்புக்கள் உண்டு.

மானிட உறவுகளில் உண்மையான நட்புறவு மனித வாழ்வின் உன்னதமான வெளிப்பாடே. சந்திக்கின்றோம், உரையாடுகின்றோம், பரஸ்பரம் நல்கினறோம், ஒருவரையொருவர் அங்கீகரிக்கின்றோம். இதன் விளைவு நட்பானது மலர்வு பெறுகின்றது. இனிமை காண்கிறது.

நட்புறவு வாழ்வின் இனிமையான அனுபவம், நட்பை எவரும் வெறுப்பதில்லை. நட்பின்றி விலகி வாழ எத்தனிப்பதும் இல்லை. நட்புறவு தளம் பல் நிலையை அடைந்தாலும் இதயமானது வேதனைத் தீயில் வெந்துளம் நோகின்றது. ஏனென்றால் தனிமைத்துயரை நீக்குவதே நட்பு.

அதே சமயம் நட்பு முறிவடையாது தொடரும் என்பதில் சாத்தியம் இல்லை. இடை நடுவில் ஸ்தமிதம் நிலையை அடையவும் கூடும். காரணம் உண்மையான நட்பு நிலவாத நிலமையே.

ஒருவரையொருவர் மனமொத்த நிலையில் பரஸ்பரம், நம்பிக்கை, தம்மைத்தாமே கையளித்து அதாவது ''ஒரு விழியில் காயம் என்றால் மறு விழியில் கண்ணீர் சிந்தும். உனக்காக நான். எனக்காக நீ. எனது மனமும், உனது மனமும் எனது வசமே இன்றும் என்றும் தொடரவேண்டும்.'' இவைநட்பின் ஆவல்கள், எதிர்பார்ப்புக்கள், அங்கலாய்ப்புக்கள். இவைதவிர்ககமுடியாதவை. இந்தரீதியில் நட்பின் வானங்கள் விரிந்து, பரந்த நிலையில் காணப்பட்டால் நட்பு அனிச்சமலராக வாடிவிடாது என்பது நிச்சயம்.

நட்பு இருக்கும் இடத்தில் அன்பு, பாசம், பரிவு, கருணை இயல்பாகவே பிரதிபலிக்கும் உணர்வுகளாக பரிணமிக்கின்றன.

''உறவுகள் தொடர்கதை ; உணர்வுகள் சிறுகதை.'' உணர்வுகள் முடிவடைந்தாலும் நட்புறவு தொடர்கதையாக துரத்தும் நினைவலைகளாக அழுத்திக் கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் நட்பெனும் வானத்தில் மூட்டங்கள் விலகினால் உறவெனும் கீதங்கள் உருமாறாது.

''மனிதர்களிடையே உள்ள உன்னதமான பரிவர்த்தனைகள் எல்லாவற்றினும் நமது தனிமைத்துயரை போக்குவது நட்பே''.

[illegible]

# இன்றைய உலகில் இளைஞரின் பங்கு




இளைஞரை சமூகத்தின் முள்ளந்தண்டு என்பார்கள். செயலிலும் இதனை நாம் காண்கின்றோம். இன்று உலகின் பல பாகங்களில் ஏற்படும் மறுமலர்ச்சிக்கு இளைஞரே காரணம் எனலாம், உலகின் பலபாகங்களிலும் மறுமலர்ச்சி ஏற்படுகின்ற அதே வேளையில், பிரச்சனைகள் தோன்றுகின்றன; சீர்கேடுகள் வளாகின்றன; போராட்டங்கள் தொடர்கின்றன. இவற்றிற்கும் இளைஞர்களாகிய நாமே காரணம் என்பதை மறைக்க முடியாது.

மதுவெறி, இனவெறி, புகழ்வெறி, காமவெறி, அதிகாரவெறி, இலட்சியவெறி, மதவெறி, சீதனவெறி, சாதிவெறி, போர்வெறி, திறவெறி, பணவெறி போன்றவற்றிற்கு நாம் ஆளாகிவாழ்ந்ததாலும், வாழ்கின்றதாலுமே உலகில் குறிப்பாக எமது நாட்டில் அமைதியின்மை காணப்படுகிறது இறைவன் மட்டிலும் அயலவன் மட்டிலும் எமக்குள்ள கடமைகளைச் சரிவர முழுமனதுடனே செய்வோமானால் எம்மிலே அமைதி பிறக்கும். எனவே, எம்மிலுள்ள வெறிகளை நெறிப்படுத்தி எம்மிலே நாம் அமைதியைக்கண்டு, அவ்வமைதியைப் பிறரும் பெற்று மகிழ வழி செய்தல் வேண்டும்.

உலகெங்கும் அமைதி நிலைக்க, மலர்ந்துள்ள டத்தாண்டில் புதுவாழ்வு பெற என் பங்கு என்ன? வாழ்கின்ற தாய் நாட்டில் ஒற்றுமை ஓங்கிட என்பங்கு என்ன? அமைதியிழந்த உள்ளங்கள் ஆறுதலடைந்திட என்பங்கு என்ன? போன்ற கேள்விக்கணைகளுக்கு விடைகளாக எமது வாழ்க்கை அமைய வேண்டும். எனவே, எமது கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை உணர்ந்தவர்களாய் பிறருக்காக வாழ்ந்திடும் உள்ளம் கொண்டு தேன் சொரியும் பூக்களாய் உருகி எரியும் திரிகளாய் வாழ்வோம்.

T. யூட்
இளவாலை

# வாழப் பிறந்தவர்களை வாழ விடுங்கள்

மனிதர்கள் தற்செயலாக இவ்வுலகில் தோன்றவில்லை. அவர்கள் மரணத்துடன் அழிந்துவிடக்கூடிய மிருகங்கள் அல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு குறிக்கோள் இருக்கின்றது. ஆகையால்,

★ வாழப் பிறந்தவர்களை வாழவையுங்கள், அல்லது வாழ விடுங்கள்.

★ குறிக்கோளைத் தேடுபவர்களைத் தேடவிடுங்கள் அல்லது தேடிக் கொடுங்கள்.

★ சிந்திப்பவர்களை சிரிக்க வையுங்கள், ஆனால் சந்தியில் வைக்காதீர்கள்.

★ அந்தரிப்போர்களுக்கு ஆறுதல் காட்டுங்கள், ஆபத்தைக் காட்டாதீர்கள்.

S. அமலன்
நாவாந்துறை

# என்றும் இயேசு உன்னோடு

மனிதா நீயும் மறுங்காதே,
மைந்தன் இயேசு உன்னோடு!
உளமே நீயும் உருகாதே,
உத்தமர் இயேசு உன்னோடு!
அன்பா நீயும் அழுகாதே,
அன்பன் இயேசு உன்னோடு!
பா(ர்)ரைக் கண்டு பதறாதே,
பரமன் இயேசு உன்னோடு!

ஆக்கம்:- மறிஸ்ரெலா ரெங்கநாதன்



## மாற்றம் வேண்டும் முன்

காதல் என்பது வரம்பற்றது. எல்லைகள்போட முடியாதது. காதலில் தியாகம் இருபாலர்க்கும் அவசியமானது.

உளத்தத்துவப்படி உள முதிர்ச்சி அடைந்தவரே காதலிக்கவும்,அதன் விளைவுகளை ஏற்கவும் தயாராக இருப்பார்.

உள முதிர்ச்சிக்கு வயது ஒரு வரம்போ, ஒரு வரையறையோ அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

## மாற்றம் வேண்டும்

திருமணம் இணக்கமான செயற்பாடுகளை வேண்டி நிற்பதால் தம்பதிகளில் காணப்படும் தனிப்பட்ட வேற்றுமைகளில் ஒருசிலவற்றிலாவது இருவரிலுமே மாற்றம் வேண்டப்படுகிறது.உதாரணமாக பையன் வீட்டிலேயே முடங்கிக்கிடக்கும் இயல்புடையவனாயும், யுவதி ஊர் சுற்றும் போக்குடையவளாயுமிருப்பின் குடும்பநலன் கருதி இருவரில் ஒருவரோ, அன்றேல் இருவருமோ தம் வாழ்க்கை முறைகளையும், போக்குகளையும் மாற்றியமைக்க வேண்டும். இருவரும் விட்டுக்கொடுத்து சமாதானமான முறையில் உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளலாம். இருவரில் ஒருவர் மற்றவரது நடைமுறைப்போக்குகளுக்கும், நடத்தைகளுக்கும்,இசையும் வகையில் தன்னை முற்றாக மாற்றிகொள்ளவும் முடியும். எது எப்படியிருப்பினும் ஒருவரது நடத்தையிலும்,மனோபாவங்களிலும் காணப்படும் மாற்றம் அவர் தன்னை விட்டுக்கொடுப்பதிலும் மற்றவரை ஏற்றுக்கொள்வதிலுமே அதிகம் தங்கியுள்ளது இவ்விடயத்தில் சொல்வதைப்போல் செயற்படுவது அவ்வளவு எளிதானதல்ல.பொதுவில் பெரும்பாலானோர் தம்மை விடுத்துமற்றவரது மாற்றத்தையும், தியாகத்தையும் வலிந்து எதிர்பார்த்து நிற்கும் சுலபமான வழியையே பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறான ஒருதலைப்பட்சமான நடைமுறையை தம்பதிகள் தம் மணவாழ்வில் மேற்கொள்வார்களானால் அது அவர்களது குடும்ப வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக–தடைக்கல்லாக அமைவதோடு மணவாழ்க்கைக்கே முடிவுகட்டிவிடவும் ஏதுவாகிவிடும்.

காதலில் தியாகம் இருபாலாருக்கும் இயல்பான அம்சமாகும். காதல் சுயநலத்தைவிட பிறர்நலத்தையே நோக்கும்பான்மை உடையது. ஒருவர் ஒருவரை உண்மையாகவே நேசிப்பவர்கள். தம்மிடம் வேண்டப்படும் மாற்றத்தை ஒரு சுமையாக கருதமாட்டார்கள். உளத்தத்துவப்படி உள முதிர்ச்சி அடைந்த ஒருவரே காதலிக்கவும் அக்காதலின் விளைவாக ஏற்படும் தியாகத்தை ஏற்கவும் தயாராயிருப்பர். நல்ல அறிவு முதிர்ச்சி அல்லது உளமுதிர்ச்சி அற்றவரது காதல் பலவந்தமும் தற்சார்புடையதுமாகவே இருக்கும். நன்கு பண்பட்ட உள முதிர்ச்சியடைந்தவர்களுக்கே மணவாழ்க்கை ஏற்புடையது–உகந்தது என்க. அதாவது கணிசமானபூரண உளவளர்ச்சித்தரம், மனப்பக்குவம் திருமண வாழ்க்கை பொருந்தும். மணமக்களைத் தெரியும்போது–வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்யும்போது உளப்பண்பாட்டு முதிர்ச்சியே அளவுகோலாகக் கொள்ளப்படல் வேண்டும். உளமுதிர்ச்சிக்கு வயது ஒரு வரையறையோ வரம்போ அல்ல.

உண்மையான காதல் தம்பதிகளில் ஒருவரிடமுள்ள சிறப்பியல்புகளையும்,ஆற்றல்களையும் வளர்த்துவிருத்தியடையச்செய்து அவனை அல்லது அவளை முழுமை பெறச்செய்ய முன் நிற்கும்–முயலும் பண்புடையதாக விளங்கும். உண்மையாகவே இத்தகைய மனப்பான்மை தம்பதிகளின் உறவுகளை உறுதியான,அதிக பயனுள்ளதாக்கும் விசேடமான இயல்பாக மிளிரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

## 2-ம் மக்கபேயர் ஆகமம்

விவிலியப் பிரியர்களே!

பழைய ஏற்பாட்டு நூல்களின், இரண்டாம் மக்கபே ஆகமமே முதன்முதலாக "உலகிலுள்ளோர் தங்கள் செபத்தினாலும், பலிகளினாலும் மரித்த விசுவாசிகளுக்காக உதவிசெய்ய முடியும்" என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

"ஆண்டவரை மன்றாடத் தொடங்கி, போரில் இறந்தவர்கள் செய்த குற்றத்தை மறந்துவிடும்படி அவரை வேண்டினர்." "உயிர்த்தெழுதலை நன்றாகவும், பயபக்தியோடும் நினைவுகூர்ந்து, பணம் தண்டி, பன்னீராயிரம் வெள்ளித்திராக்மாக்களை இறந்தவர்களுடைய பாவங்களுக்காகப் பலி ஒப்புக்கொடுக்கும்படி யெருசலேமுக்கு அனுப்பினார்கள்" "...ஆதலால், பாவங்களினின்று மீட்கப்படும்படி இறந்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது புனிதமும் பயனுமுள்ள எண்ணமாய் இருக்கிறது." (12: 42–46)

அடுத்து மன்றாட்டுச் செபங்கள் விண்ணகத்திற்கும், புவிக்கும் இடையேயுள்ள உறவை அதிகப்படுத்துகின்றது. ஏனெனில் நாம் புனிதர்களிடம் இரந்து கேட்கின்றபோது அவர்களும் விண்ணுலகில் இருந்து எங்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றார்கள் என்பதும், இப்புத்தகம் எமக்குத்தரும் இன்னுமொரு கருத்தாகும். "அவர்கண்ட காட்சி என்னவென்றால் ...... ஒனியாஸ் என்பவர் கைகளை நீட்டி யூதமக்கள் அனைவருக்காகவும் மன்றாடினார் ...... எரெமியாஸ் பொன்வாளை யூதாசுக்குக் கொடுத்து, கடவுளின் கொடையாக இப்புனித வாளைப் பெற்றுக்கொள்" (15: 12–16) என்று கூறினார்.

நன்றியோடு — அருட்திரு பெனற்

---

அறிந்துகொள்ளுங்கள் (98)

## முடிவுரை

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களும் சட்டநூல்கள். இறைவனின் அரும் பெரும் செயல்களை எடுத்துக் கூறும் நூல்கள். இஸ்ராயேல் மக்களின் ஆரம்பத்தையும், விடுதலையையும் எடுத்துக் கூறுகின்றன. இறைவன் இஸ்ராயேலை அழைத்தார். அதில் முதல் பகுதி மோயீசனை அழைத்ததாகும். மோயீசனை இறைவன் எவ்விடத்தில் அழைத்தாரோ அங்கேயே இஸ்ராயேலர் இறைவனோடு உடன்படிக்கை செய்து கொள்ளுகின்றனர். எல்லா மக்களுக்கும் மீட்பின் வாய்க்காலாய் இருப்பது இஸ்ராயேலின் அலுவலாகும். இவ்வலுவல் சீனாய் உடன்படிக்கையில் எடுத்துக் கூறப்படுகின்றது. இவ்வலுவலுக்காகவே சட்டம் கொடுக்கப்படுகிறது.

சட்டம் ஒரு வாழ்க்கை வழிபாடும், அதைக் கவனமாகக் கடைப்பிடித்தால் இறைவனின் அருளைப் பெறலாம். யாவருக்கும் மீட்பரான கிறிஸ்துவினுடைய வருகையை ஆயத்தம் செய்வதும், அவ்வருகையை முன்னறிவிப்பதும் அதன் பொருளைப் பல முன்குறிகளால் சுட்டிக்காட்டுவதுமே பழைய ஏற்பாட்டின் நோக்கம். கிறிஸ்துவின் மீட்பின் செயலை நிறைவு செய்ய முன்னிருந்த மக்கள் குலத்தின் நிலைக்கேற்ப இறைவனையும், மனிதனையும் பற்றிய அறிவையும், இரக்கமும், நீதியும் உள்ள இறைவன் மனிதனுடன் பழகும் விதத்தையும் பழைய ஏற்பாட்டு நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

பழைய ஏற்பாட்டில் காணப்படும் சில நிகழ்ச்சிகள், சட்டங்கள் இக்கால எமது வாழ்க்கை முறைக்கு ஒவ்வாதனவாக ஏற்றுக் கொள்ளமுடியாதனவாக இருக்கின்றன. ஆனால் அவை அக்கால பழக்கவழக்கங்களோடும், மேற்காசிய சட்டங்களோடும் ஒத்தவைகளாக இருப்பதை பல ஆராச்சிகள் மூலம் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டின் முதல் 5 நூல்களுக்கும் சில பின்னணி விளங்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். இனி தொடரும் அறிந்து கொள்ளும் பகுதியில் புதிய ஏற்பாட்டு நூலுக்கு பின்னணி விளக்கங்களுடன் உங்களை சந்திக்க விடைபெறுகிறேன் நன்றி.

இ. ம. ஜெயசீலன்

---

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

பழமொழி ஆகமத்தின் ஏட்டைப்புரட்டும் போதெல்லாம், நமக்குப் புதிய சிந்தனைகள் தோன்றவே செய்கின்றன. இவை ஒவ்வொன்றும் காலத்துக்கேற்ற வகையிலே நம்மை ஏணப்படிகளாக உயர்த்தி நம்மை இறையரசைக் கட்டிவெழுப்ப உதவுகின்றன. இதற்குப் பக்கபலமாக "நமது நாட்டுப்பழமொழிகளும்" இக்கால நிகழ்வினூடே நம்மை இட்டுச் செல்லத்தூண்டுகின்றது!

முக்கியமாக இன்று நமக்குத் தேவையான அரும்பெரும் குணம் 'பொறுமை என்பது! பொறுமையைக் கடைப்பிடிக்காததினால் எத்தனை உயிர்கள், உணர்ச்சிவேகத்தில் அழிக்கப்படுகின்றது.! எனவே தான் நம் முன்னோர்......

"பொறுமை கடலினும் பெரிது" என்றார்கள்.!

அதுமட்டுமல்ல, பொறுமையற்ற தனத்தினால் வரும் கேட்டையும் அவர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை. எனவே தான்:-

"பொறுத்தார் பூமியாழ்வார் - பொங்கினார் காடு உறைவர்" என்றும் எச்சரித்தனர்.

"இதற்குத் திருநூல் 19/19ல் — " பொறுமையற்றவன் நட்டமடைவான்! அவனை நீ ஒரு முறை மீட்டுக் காத்தாலும் மீண்டும் அவன் நட்டமடைவான்" என்கிறது. பொறுமையின்மையால் விளையும் கேடுகளை உன்னிப் பார்த்து, பொறுமையின் மேன்மையைக் கடைப்பிடியுங்களேன்.!

பொறுமை மட்டும் வாழ்வில் பெரிதல்ல. அதனை நமது வாழ்வில் கடைப்பிடிக்க, அறத்தவரின் ஆலோசனைப்படியும் நடக்கவேண்டும் என்கிறார்கள் இருசாராரும். உதாரணமாக:-

"சுயபுத்தியில்லையேல் - சொல்புத்திகேள்" என்றும், இதில் யாருடைய புத்திமதியை நாம் கேட்க வேண்டும்? என்பதனையும் முதுமொழி சுட்டிககாட்டுகின்றது இப்படி :-

"மூத்தோர் சொல்லும் - முதுநெல்லிக்கனியும், முன்னே கசக்கும் - பின்னே இனிக்கும்" என்று இருவாக்கியங்களில் அறிவுரை கூறிய முதுமொழியாளர்களுக்கு இணையாகத் திருநூலும், "உன்கடைசி நாள் வரைக்கும் நீ ஞானியாய் இருக்கும் படியாக ஆலோசனை கேள்! அறிவுரையையும் கைக்கொள்" என 19/20-ல் தெட்டத் தெளிவாக உரைக்கின்றது.

புத்திமதி எல்லோருக்கும் பொதுவான சொத்துத்தான்! ஆனால், புத்திமதி சொல்பவனும் 'தான் கூறியதுபோல நடக்க வேண்டும்' என்பதனையும் எல்லோரும் ஒன்று கூடிச் சிந்திப்போமா......?

வாரம் 1 சிந்தனை

மறைந்த சிலர் சொன்னதை மறைக்க - சிலர் மறைந்தவர்களை மனம் நிறைந்த மலர்களால் மூடி விடுகிறார்கள்!

சிந்தியுங்கள்
சந்திப்பேன்.
எஸ். ஏ. நாதர்.

---

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 4<br>கதிர்: 2 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### விழி வழி !

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கிறான்.
அன்பும் நட்பும் உள்ள உள்ளத்தில்
அமைதியும் சமாதானமும் என்றும் இருக்கும்.
அன்பும் நட்பும் நிறைந்த இல்லத்தில்
இறைவனின் அன்புக்கரம் வழிநடத்தும்
அன்பும் நட்பும் அழகாக அமையும்
கல்விக்கூடத்தில் அறிவும் அற்றலும் வளர்ச்சி பெறும்.
அன்பும் நட்பும் அரசாளும் சமூகத்தில்
வளர்ச்சியும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும்
அன்பும், நட்பும் உங்களுள்
ஊற்றாக ஓட தினமும் திருப்பலி
காணுங்கள் என்று கூறும்

அன்பின்—அன்புவிழி.

### திருக்குறளும் விவிலியமும் போட்டி—4

பரிசுபெறும் கண்மணி! பா. ஆன் அருந்தவராணி.

அங். எண்: 46

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் பாராட்டுக்கள்.

### நா அடக்கம்

இறைவனால் படைக்கப்பட்ட எமது ஐம்பொறிகளில் நா ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இறைவனைப் புகழ்வதற்காக அளிக்கப்பட்ட இந் நாவால், நாம் பலரை புகழ்ந்த பொழுதிலும் இகழ்ச்சிக்கும் பயன்படுத்துகிறோம். ஒருவர் இன்னொருவரோடு ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக்கொள்வதும் அதேவேளை ஒருவர் இன்னொருவரின் மனதைப் புண்படுத்தி சதாகாலமும் அவனை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்வதும் இவ் ஒரே நாவால்தான். நாவானது நெருப்பிலும் கொடியதாகவும் இருப்பதுண்டு. ஆம் "தீயினால் சுட்டபுண் ஆறும், ஆறாதே நாவினால் சுட்டவடு" என நாவின் கொடுந்தனத்தை திருவள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பரிசுத்த ஆவியின் ஆலயமாகிய எமது உடலில் உள்ள நாவினால் நாம் சற்றும் கூசாது தீய வார்த்தைகளை வாரி இறைத்து மகிழ்கின்றோம். இன்னும் இல்லாதது, பொல்லாதது எல்லாம் ஒருங்கே இணைத்து வதந்தி வடிவில் பரப்புகின்றோம். இல்லை நாம் இறைவன் தந்த நாவை இனிய வார்த்தைகளைப் பேசுவதற்குப் பயன்படுத்த வேண்டும். நாம் கூறும் வார்த்தைகள், சொற்கள் ஒவ்வொன்றும் பிறருக்குப் பயன்படத்தக்கதாக இருக்க வேண்டும். இதைவிட்டு அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதாக அமையக் கூடாது. நம்மிடையே குடிகொண்டிருக்கும் வார்த்தை விண்ணோர், மண்ணோர் கழிகூறத் தக்கதாக அமைதல் வேண்டும்.

M. M. நிக்ஸன் A/11

### வினா விடை முடித்துவிட்டோம்

என்னவிழா ? உதயவிழா
என்ன உதயம் ? குழந்தை உதயம்
என்ன குழந்தை ? அன்புக் குழந்தை
என்ன அன்பு ? தாய் அன்பு
என்ன தாய் ? நேசத்தாய்
என்ன நேசம் ? பாசநேசம்
என்ன பாசம் இரத்த பாசம்
என்ன இரத்தம் ? சிகப்பு இரத்தம்
என்ன சிகப்பு ? அபாய சிகப்பு
என்ன அபாயம் உலக அபாயம்
என்ன உலகம் ? மானிடர் உலகம்
என்ன மானிடர் ? அறிவிலி மானிடர்
என்ன அறிவிலி ? பக்தி அறிவிலி
என்ன பக்தி ? கடவுள் பக்தி
என்ன கடவுள் ? திரித்துவக் கடவுள்
என்ன திரித்துவம் ? இறை திரித்துவம்
என்ன இறை ; எங்கள் இறை
என்ன எங்கள் ? சிலுவை எங்கள்
என்ன சிலுவை ? எம்மை மீட்ட சிலுவை

ல. ஜெய்சி
அங்கத்துவ எண்—211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING

BASIC LANGUAGE
d BASE III+
LOTUS 1, 2, 3
WORD PROCESSING

**COMMENCEMENT FROM 16-01-1990**

★ LECTURES BY MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (LONDON)
★ PRACTICALS ON I. B. M. (COMPATIBLES)
★ தமிழிலும் விளக்கங்கள்
★ FEES MAY BE PAID IN INSTALLMENTS
★ VALUABLE CERTIFICATE ON COMPLETION OF COURSE

**C.I.M.A, I.D.P.M, I.A.B.**
**SHORTHAND & TYPING**
நடைபெறுகின்றன.

**School of Business Administration**
(LEADERS IN COMPUTER EDUCATION)
16, 3rd Cross Street,
(WEST OF O.L.R CHURCH)
JAFFNA. A/05


யாழ் மறைவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு நடாத்திய ஒளி விழா சிறப்புப் போட்டியில் பரிசு பெறும்

## வாழ்த்து மடல்கள்

1-வது பரிசு: (1) ஞா. அரியமலர்—மிருசுவில் பங்கு.
2-வது பரிசு: (2) ஞா. மரியஸ்ரெலா—வட்டாரம் 12 குருநகர், நெடுந்தீவுப் பங்கு.
3 வது பரிசு: (3) செல்வன் இ. எழில்ராஜன் புனித யாகப்பர் வீதி, இளவாலைப் பங்கு

## சுவரொட்டிப் போட்டி முடிவுகள்

1-வது பரிசு: அ. சொலின்ஸ் டொனால்ட் கடுத்தனாலை—இளவாலை.
2 வது பரிசு: திருமதி. றா. ஞானசோதி —மிருசுவில் பங்கு.
3-வது பரிசு மெற்றில்டா இராஜநாயகம்—சில்லாலை.
நடுவர் ஓவியர் மாக்குழுவினர்.

இப்போட்டிகள் யாவும் "குடிலில் மட்டுமா கிறிஸ்து பிறப்பது" என்ற கருவை மையமாகக் கொண்டு நாடகம், கவிதை, சுவரொட்டி போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் பொது நிலையினரது உற்சாகமான பங்களிப்புகளும், அவர்களின் புதிய சிந்தனைத் தூண்டல்களும் பல பங்குக்குருக்களின் ஒத்துழைப்புடன் திறம்பட நடாத்தப்பட்டது. இவை போன்று பங்கு மட்டத்திலும் நடாத்தி பொதுநிலையினரது பொறுப்புணர்வுகளை உணர்த்த கலைகலாசார நிகழ்ச்சிகளையும் நல்ல ஊடகமாக பயன்படுத்தலாம் என்பதை இப்போட்டிகளின் மூலம் அறியக் கூடியதாய் அமைந்தது.

## மரண ஞாபக அறிவித்தல்கள்

**ஜனவரி 10.**
திரு. B. J. மரியாம்பிள்ளை
3-ம் ஆண்டு நினைவஞ்சலி
அன்பு மனைவி, சுருவில் வீதி, கரம்பன். A/11

**ஜனவரி 20.**
திருமதி. மரியம்மா செல்லத்துரை
3-ம் ஆண்டு நினைவுத் திருப்பலி
உரும்பிராய், புனித மிக்கேல் ஆலயம், மாலை 5 மணி. A/15

**ஜனவரி 23.**
Dr. பயஸ் வஸ்தியாம்பிள்ளை
1-ம் வருட நினைவுத் திருப்பலி
யாழ், அடைக்கல அன்னை ஆலயம், காலை 6 மணி. A/16


## மாதா மெழுகுதிரி கைத்தொழில் நிலையம், சாட்டி

எம்மிடம் செபமாலை, செபமாலைத் தியானம் செபப் புத்தகங்கள், பரவணிக்கங்கள், படங்கள் மெழுகுதிரி, குமஞ்சான, தோலகட்டி நெல்லிரசம், இவற்றுடன் பாதுகாவலன் பத்திரிகையும் பெற்றுக்கொள்ளலாம்.

**புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ்**
140, சுருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை.
கிளை: A.3, ஆஸ்பத்திரி வீதி, மன்னார், A/09


### 1-ம் வருட நினைவு



திரு. தவிதுப்பிள்ளை மிக்கேல்பிள்ளை
மலர்வு: 19-08-1910 உதிர்வு: 22-01-1989

"வழியும், சத்தியமும் ஜீவனும் நானே என் வழியாய் அல்லாமே பிதாவினிடத்தில் சேருகிறவன் ஒருவனுமில்லை,

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 26-01-90 வெள்ளிக்கிழமை, பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சென் தோமாஸ் வீதி
பருத்தித்துறை. A/309

### 1-ம் வருட நினைவு




மரியாம்பிள்ளை இராசதுரை
(இளைப்பாறிய ஆசிரியர்)
பிறப்பு: 4-4-1904 இறப்பு: 14-1-1989

ஆண்டொன்று சென்றாலும் சிந்தையில் கலந்தெம்மில் எக்கணமும் நினைவில் உள்ள ஆருயிர் அன்பரே! நிந்தையிலும் மறந்திடோம் உமை நாமே!

உம் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர். A/08

### 2-ம் ஆண்டு நினைவு



வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை
அன்னையின் மடியில் 24-8-1925
ஆண்டவன் கரங்களில் 20-2-1988

மதுரமான யேசுவே! மண்ணுலகின்னிறு விண்ணுலகிற்கு நீர் அழைத்துக் கொண்ட வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்களின் ஆத்துமங்களை உமது பாதாரவிந்தங்களில் அரவணைத்து நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா மோட்ச பேரின்ப பாக்கியத்தையும் அளித்தருளும் சுவாமி. ஆமென்! A/07

### 31-ம் நினைவு தினம்



யோசவ் பேதுருப்பிள்ளை
(இளப் தம்பு)
மண்ணில்: 29-06-1893 விண்ணில்: 18-12-1989

அன்புணர்வும், அர்ப்பணிப்புப் ஆற்றுப்படுத்தும் அருந்திறனும் உன்னதரத் தோடியைய ஊற்றுக் கண்ணாய் ஊன்று கோலாய் முன்வழி காட்டிய மூத்த தலைவனுமாய் நேற்றுவரை நீயிருந்தாய் இன்றுனை நாமிழந்தோம் தோற்றமது மாயமதாம்.

பிரிவால் துயறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
17/2 மருதடி வீதி,
யாழ்ப்பாணம். A/10

### 1-ம் ஆண்டு நினைவு



திருமதி. செபமாலை சவினம்மா மரியதாசன்.
மலர்வு: 13-5-1933 உதிர்வு: 16-01-1989

இன்று உறவு நாளை பிரிவு மனிதன் வாழும் நாட்டிலே, என்றும் அழியா உறவு உண்டு இறைவன் வாழும் வீட்டிலே! எம்மை விட்டுப் பிரிந்த எம் அன்புத் தாயே!

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

பிரிவால் துயருறும், கணவன் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உபதபால் கந்தோர்.
பறப்பாகிகண்டல். A/13

### ஐந்தாண்டு நினைவஞ்சலி



ராசதுரை-ராஜகுமார்
அன்னை மடியில்: 5-06-1956 ஆண்டவன் அடியில்: 25-01-1985

பாடுகளின் பாதையிலே-என் மன்னவனின் ஊர்வலமோ? ஊர்வலத்தின் முடிவினிலே இறைவனடி சங்கமமோ? சங்கமமாகி ஐந்தாண்டு சென்றதுவோ

மரண அவஸ்தைப்பட்ட யேசுவே! மரித்த உம் அடியானின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்து முடிவில்லாப் பிரகாசத்தையும ஈந்தருளும்.

திருப்பலி: யாழ். மரியன்னை பேராலயம் 25-01-90 காலை 6-15 மணி.

இவரின் பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, ஆசைமகள். A/12

### எழுதிச்செபியுங்கள் போட்டி

பாராட்டுப் பெறுவோர்

1) ம. மனோயினி
2) சி. லூயிஸ் நாயகம்,
3) யூஜின் பற்றிமா றஜனி,
4) ல. ஜொய்சி,
5) M. M. நிக்சன்,
6) இ. சறோஜினி,
7) வ. அந்தோனிசேவியர்.
8) ஆ. வெற்றி மேரி டயஸ்"
9) S. ஜெஸ்லிட்,
10) J. பிலோமினா,
11) ஞ. ஜெனார்த்தனன்.
12) R. மேரி கிறிஸ்ரீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# முனிவர் சிலைக்கு மலரஞ்சலி

சென்னை மரீனாக் கடற்கரையிலுள்ள வீரமாமுனிவர் சிலைக்கு. வீரமாமுனிவரின் 310-வது பிறந்த நாள் அன்று மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவரின் இயற்பெயர் யோசவ் கொன்ஸ்டன்டைன் பஸ்ரீ ஆகும் இவர் யேசுசபைத் துறவியாக இந்தியாவுக்கு 1911-ம் ஆண்டு வந்து சேர்ந்தார். தமிழகத்தில் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் தெளிவு படக்கற்றுத்தேர்ந்தார். தமிழ் அகராதியின் தந்தை என அழைக்கப்படும் வீரமாமுனிவர் 'தொண்மை விளக்கம்" எனும் இலக்கண நூலையும், தேம்பாவணி எனும் காவியத்தையும் இயற்றினார். 1968-ம் ஆண்டு சென்னையில் நடந்த தமிழ் மகாநாட்டில் இச்சிலை எழுப்பப்பட்டது.

# மாணவருக்கு ஒரு காவியம்

தமிழ்ப் பெருங்கவிஞர் கண்ணதாசனால் இயேசு காவியம்' இயற்றப்பட்டுதிருச்சிகலைக்காவேரி நிறுவனத்தால் நூலாக வெளியிடப்பட்டது தெரிந்ததே. தற்பொழுது பள்ளி மாணவருக்கான 'மாணவர் பிரதி இயேசு காவியம்' 'யேசு காவியம்' எனும் மூலநூலிலிருந்து தொகுத்து எடுக்கப்பட்டு மீண்டும் திருச்சி கலைக்காவேரி நிறுவனத்தால் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் விழாவன்று மேற்கு ஜேர்மனி சொனோறஸ் நிலைய இயக்குனர் டாக்டர் குலாஸ்மல தலைமையில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது தமிழறிஞர் வி. ஆர். விஸ்வநாதம் அவர்கள் சிறப்புரை ஆற்றியது சிறப்பிக்கத்தக்கதாக இருந்தது.

# அகதிகளை ஏற்றுக்கொள்ள அழைப்பு

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தனது செய்தியில் உலகில் அதிகரித்து வரும் அகதிகளின் எண்ணிக்கை குறித்துக் கவலை தெரிவித்து இந்த அகதிகளில் புனர் வாழ்விற்கு உதவுவது ஒவ்வொரு கிறிஸ்தவனின் தார்மீகக் கடமை என்று தெரிவித்தார்.

மேலும் ஒவ்வொரு நாடும் தன்னிடம் தஞ்சம்புகும் அகதிகளை அன்போடும், சகிப்புத் தன்மையோடும் ஏற்றுக் கொண்டு அவர்களது தனி வாழ்விலும், பொதுவாழ்விலும் குறிப்பாகக் குழந்தைகளின் கல்வி, இளைஞர்களின் வேலை வாய்ப்பு ஆகியவற்றில் அக்கறை கொள்ளல் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

# கிறிஸ்தவ துர்மாதிரிகை

கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்கான உரையாடல் பற்றிய ஆய்வரங்கொன்றில் கலந்து கொண்ட சுமார் 50 அறிஞர்களும் பொதுநிலைத் தலைவர்களும், இறையியலாளரும் இந்தியாவில் கிறிஸ்தவர்களிடையே"ள்ள வேற்றுமைகள் துக்கத்துக்கும், துர்மாதிரிக்கும் ஏதுவானதென கருத்துத் தெரிவித்தனர்.

கொச்சினில் நான்கு நாட்களாக நடந்த ஆய்வரங்கில் கலந்துகொண்டோர் இது பற்றி தேசியமட்டத்தில் மகாநாடு நடத்தவேண்டுமென்றும், பிராந்திய மட்டத்தில் குழுக்களிடையே உரையாடல் நடைபெற வேண்டுமென்றும், பல்வேறு சமூகத்தவரிடையே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டனர்.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவின் தலைவரான வாரணாசி ஆயர் பற்றிக் டிசூசா இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

''மேற்கத்திய நாடுகளில் வரலாற்று சமுதாய சூழ்நிலைகள் காரணமாக இப்பிரிவினைகள் இருப்பது நியாயமென்றாலும், இந்தியாவில் இவை துக்கத்துக்கும், துர்மாதிரிக்கும் ஏதுவானவை" என அவர் கூறினார்.

# அரசியல் சூழ்நிலைகளால் போதை மருந்து பெருக்கம்

சென்னையில் Y. M. C. A. எனப்படும் இளம் கிறிஸ்தவர்கள் குழு போதை மருந்துகள் மற்றும் போதை மருந்திற்கு அடிமையாதல் பற்றிய கருத்தரங்குகளை நடத்தியது. இக்கருத்தரங்குகளில் உரையாற்றிய தமிழக வருவாய்த்துறை செயலகர் சுவாமிநாதன் அவர்கள் மாணவர்களுக்குபோதைப் பொருளின் தீமை பற்றி எடுத்துக்கூற வேண்டுமென்றும் ஒரு சில அரசியல் சூழ்நிலைகளால் போதை மருந்து பெருகி வருவதாகவும் அங்கு குறிப்பிட்டார்.

## வருந்துகிறோம்.

எமது அச்சகத்திற்கு ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக பாதுகாவலன் பத்திரிகையை சென்ற வாரம் வெளியிட முடியவில்லை. வாடிக்கையாளர்களுக்கு இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துகிறோம்.

(அ-ர்)

# நவீன தொழில்நுட்பம் பற்றிய கலந்துரையாடல்

சென்ற மாதம் சமயக் கலந்துரையாடல் ஆணைக்குழு கிறிஸ்தவ, இந்து, முஸ்லீம் கலந்துரையாடல், சமயக்கல்வி மற்றும் நவீன சமுதாயம் எனும் மையக்கருத்தில் கருத்தரங்கு ஒன்றை வத்திக்கானில் நடத்தியது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் திருத்தந்தையை சந்தித்தபோது இளைஞர் சமுதாயத்திற்கு சமய மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை கற்றுத்தர வேண்டும் என்று அவர் கூறினார்.

மேலும் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி ஆனது அழிவிற்கு நம்மை இட்டுச் செல்லாது மனித வாழ்வின் ஆக்க பூர்வச் செயலுக்கு நம்மை இட்டுச்செல்ல வேண்டுமென்றும், இந்த நவநாகரீக உலகில் நடந்து வரும் மாற்றங்களைச் சமாளித்துத் தீர்க்கமான ஒரு செய்தியை நம்பிக்கையின் சின்னமாக வழங்க வேண்டுமெனவும், கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் மதங்களிடையே ஒரு சில வித்தியாசங்கள் இருப்பினும் இறைத்திட்டத்தின் படி மனித முழுமையை நோக்கிப் பாடுபட வேண்டுமெனவும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

# எழுதிச்செபியுங்கள் போட்டி - 30

## ''நீதியுள்ள அரசாட்சி உருவாக......''

ஒரு செபம் எழுதி 05-02-1990 ற்கு முன் ''பாதுகாவலன்'' த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த செபம் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு பரிசு ரூபா 25/-ம் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரிசு பெறுபவர் பெயரும், பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

போட்டி 29ல் பரிசு பெறும் செபம்

## ''தேவ அழைத்தல்களை ஊக்குவிக்க''

''நீ கல்லாய் இருக்கிறாய்; இந்தக் கல்லின் மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்'' என்று இராயப்பரை எம் தாய்த் திருச்சபைக்கு அத்திவாரக் கல்லாக நியமனம் செய்த இயேசுவே!

அவரைத் தொடர்ந்து பற்பல திருப்பணியாளர்களை வழங்கி இத்திருச்சபையை வழிநடத்தி வருகின்ற உமக்கே எம் நன்றிகள் இதே மறைப்பணியாளர்கள் மூலம் ஒரு சிரிய சமுதாயம் சமைக்க '' அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு'' என்று அருளினீரே! இந்த அருள்வாக்கை உமது மக்களாகிய நாம் பின்பற்றி வேலையாட்களான உன்னத அழைப்பினைப்பெற விழித்தெழுந்தருளச் செய்தருளும்.

உமமையே அறியாது அஞ்ஞானிகளாக வாழும் எத்தனையோ கோடிமக்கள் உமது அன்பின் வலிமையை அறிய இன்னும் பலரை உம் திருப்பணிக்கு அழைக்க அருள்கூரும். விசேஷமாக எம் மக்கள் மத்தியில் தேவ அழைத்தலின் மகத்துவத்தினையும், அதன் அவசியத்தினையும் உணர்த்தியருளும்.

அன்று மீன்பிடிப்போரை மனிதனைப் பிடிப்போராக்கிய இயேசுவே! இன்றைய காலகட்டத்தில் மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போல் வழிதவறி வாழும் எம் இளைஞர் சமுதாயத்தை உமதுவழி செல்வோராகவும் உமது திருப்பணியாளர்களாகவும் ஆக்கிடத் தயைசெய்யும். நீரும் உமது வழிவந்தோரும் விட்டுச்சென்ற திருப்பணியை இவர்கள் தொடரவும், உலக வாழ்விலன்றி ஆன்மீக வாழ்விலும் நம்பிக்கை வைத்து இவ்வுலகிற்கு விசேடமாக எமது நாட்டிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அருள்பாலித்தருளும். ஆமென்!

லெற்றீஷியா தைரியநாதர்
தென்மூலை, அச்சுவேலி.

# அமைச்சராக அருள்தந்தை

பாகிஸ்தான் பிரதமர் பூட்டோ தன்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை குறுகிய வாக்குகளால் தோற்கடித்த பின்னர் எதிர்க்கட்சியிலுள்ள மிதவாதிகளின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

தேசியப் பேரவையின் சிறுபான்மை அங்கத்தவர் ஆறுபேர் அக்டோபர் 25-ம் திகதி பிரதமரைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தனர். சிறுபான்மையினர் விவகார அமைச்சரான பிதா றூபின் ஜூலியஸ், ஜோர்ஜ் கிளெமென்ற் என்னும் இரு கத்தோலிக்க அங்கத்தவரும் இதில் அடங்குவர்.

இதன் பின்னர் பிதா ஜூலியஸ் பஞ்சாப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டு, பின் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பஞ்சாப் மாநில அரசு எதிர்க்கட்சியிடம் உள்ளது.

# விளையாட்டு முக்கிய நிகழ்ச்சி

1990-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் 'ஷாவர்' எனப்படும் சர்வதேச ஸ்தாபனத்தின் அதிகாரிகள் மற்றும் நடத்துனர்கள் சுமார் 350 பேர் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பரைச் சந்தித்தனர். அப்போது சர்வதேச அரங்கில் நடைபெறவிருக்கும் 'ஷாவர்' விளையாட்டு ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்றும் இதன் மூலம் உலக சமுதாயத்தின் அடிப்படை ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டுமெனவும் திருத்தந்தை கேட்டுக் கொண்டார்.

## 31-ம் நாள் நினைவு



திருமதி.
யோசேப்பின் மேரி கிறேஸ்
அன்புராஜா (அற்புதமலர்)
ஆசிரியை. திருக்குடும்பக்
கன்னியர்மடம், யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| பிறப்பு: | அந்தமுடிவு: |
| 3–9–1936 | 24–12–1989 |

யாழ். மரி அன்னை பேராலயத்தில் 23-1-90 செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர், சகோதரிகள்.

A/14

இப்பத்திரிகை திரு. நிக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல.QB/1001/58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org